முட்டாள்களை அறிவாளிகளாக்கும் மூலிகைகள் - 9

# சங்காஹோலி

## (CANCSCORE DECUSSATA)



மூளையை பலப்படுத்தும் மூலிகைகளில் சங்காஹோலி எனும் மூலிகை மிக முக்கியத்துவம் வாய்ந்த இடம் வகிக்கிறது. இம்மூலிகை மூளையை சுறுசுறுப்பாக்குவதுடன் ஞாபக சக்தியையும் கூட்டுகிறது.

***தோற்றம்:*** இது பூமியில் படர்ந்து வளரும் ஒரு கொடியின மூலிகையாகும். இதன் கிளைகள் மெல்லியதாகவும், இலைகள் சிறியதாகவும், நீளமாகவும், அடர்ந்த பச்சை நிறத்திலும் இருக்கும். இதன் பூக்கள் அழகாகக் கிண்ண வடிவத்தில் இருக்கும். வெண்மை கலந்த ரோஜா நிறத்தில் இருக்கும். கடினக்கல் நிலத்திலும், தரிசு நிலத்திலும் வளரும்.

***இயல்பு:*** உஷ்ணம் - ஈரம்

***முக்கிய குணங்கள்:*** இரத்தத்தைச் சுத்தம் செய்யும் காரணத்தால் கிரந்திப்புண், சீழ்ப்புண் மற்றும் இரத்தக் கோளாறினால் ஏற்படும் வியாதிகள் ஆகியவற்றிற்கு இத்துடன் மிளகைச் சேர்த்து அரைத்து சாற்றைத் தயாரித்துக் குடிக்கச் செய்வார்கள். மேலும் இதே முறையில் வாயுக் கோளாறு மற்றும் மூலநோய்க்குப் பயன்படுத்துவார்கள்.

***பயன்படுத்தும் முறை:*** இது வயிற்றை மிருதுவாக்கவும், ஞாபக சக்தியை அதிகரிக்கவும், சீழ்மேகம், வெட்டை நோய் மற்றும் நீரிழிவுநோயைக் கட்டுப்படுத்த இதனைச் சூரணம் செய்து சாப்பிடச் செய்வார்கள். வெட்டை நோய் மற்றும் நீர்த்துப்போன இந்திரியத்தைக் கெட்டியாக்க வேரின் மேல் தோலை மருந்தாகப் பயன்படுத்துவார்கள். பலவிதமான கண் நோய்களுக்கும் இது பயனுள்ளதாக அமைந்திருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

***அளவு:*** இம்மூலிகையை 7 கிராம் முதல் 12 கிராம் வரையிலும் இதன் வேரை 3 கிராம் முதல் 5 கிராம் வரையிலும் மருந்தாகப் பயன்படுத்தலாம்.


கருமையான கூந்தல்
அருமையான முடி வளர!



அரேபியன் ஆயில்

மன்னர் காலத்து மாமருந்து




மூட்டுவலி, நரம்பு வலி, சதை பிடிப்பு வலி, பாலுணர்வு இழத்தல், தலைப் பொடுகு, தலைமுடி உதிரல், வெண்புள்ளி நீங்க டாக்டர் அக்பர் கவுஸரின் அரேபியன் ஆயில் பூசலாம். 10 சொட்டு எண்ணெய் பாலில் கலந்து குடித்தால் உடல் உஷ்ணம் தணியும். மலச்சிக்கல் நீங்கும். முகத்தில் பூசினால் பருக்கள், முகவறட்சி நீங்கும்.

வாணியம்பாடி டாக்டர் அக்பர் கவுஸரின்

தெய்வீக மருத்துவம்

370, மசூதி வீதி, நியு டவுன்,
வாணியம்பாடி-635752, வேலூர்மாவட்டம்
தொலைபேசி: 04174-235390, 235395,
232260,232370,232380.பேக்ஸ்:04174-232250
செல்: 09842347868, 9443225390
e-mail: hakeemakbarkausar@gmail.com
drakbarkausar@gmail.com